ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1811/4 - 2013 මැයි මස 21 වැනි අඟහරුවාදා - 2013.05.21
*1811/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான 2 ஆவது பிரிவின்கீழ் நடைபெறும் விசாரணை.*

*மேல் மாகாணத்தின் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் களனி பிரதேச சபை கருமங்களை மேற்கொள்ளும்போது மேற்குறிப்பிட்ட நியதிச் சட்டத்தில் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1795/30 ஆம் இலக்கம் கொண்ட 2013, சனவரி மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டட்லி கருணாரத்ன அவர்களைக் கொண்ட தனிநபர் விசாரணை ஆணைக்குழுவின் காலம் ஏப்பிறல் 12 ஆந் திகதி தொடக்கம் யூலை 17 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதலமைச்சரும் நிதி, மற்றும்*
*திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்*
*வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு*
*தொடர்பான அமைச்சரும்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*மேல் மாகாணத்தின் முதலமைச்சு,*
*சிராவஸ்தி மந்திரய,*
*கொழும்பு 7,*
*2013,மே 09.*

*6- 37*

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான 2 ஆவது பிரிவின்கீழ் நடைபெறும் விசாரணை.*

*மேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் மீரிகம பிரதேச சபையின் தலைவர், ஆனந்த பிரேமசந்திர ரணவீர கருமங்களை மேற்கொள்ளும்போது மேற்குறிப்பிட்ட நியதிச் சட்டத்தில் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1795/29 ஆம் இலக்க 2013, சனவரி மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பீ. எல். கே. விமலச்சந்திர அவர்களைக் கொண்ட தனிநபர் விசாரணை ஆணைக்குழுவின் காலம் ஏப்பிறல் 17 ஆந் திகதி தொடக்கம் யூலை 17 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதலமைச்சரும் நிதி, மற்றும்*
*திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்*
*வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு*
*தொடர்பான அமைச்சரும்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*மேல் மாகாணத்தின் முதலமைச்சு,*
*சிராவஸ்தி மந்திரய,*
*கொழும்பு 7,*
*2013,மே 09.*

*6- 38*

---

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான 2 ஆவது பிரிவின்கீழ் நடைபெறும் விசாரணை.*

*மேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள்/குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றைக் காரணமாகக் கொண்டு, மகரகம நகர சபையின் அங்கத்தவரான ஹேவா விருதுகே நிசாந்த விமலசந்திர அவர்களினால் கருமங்களை மேற்கொள்ளும்போது மேலலே சொல்லப்பட்ட நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள்*

செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக தனிநபர் விசாரணை சபைக்காக ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பீ. எல். கே. விமலச்சந்திர அவர்களை நியமிக்கின்றேன்.

**விசாரணை செய்யப்படவேண்டிய விடயங்கள்/குற்றச்சாட்டுக்கள்** :

(1) நீர் மகரகம நகர சபையின் அங்கத்தவராக இருந்து கருமங்களை மேற்கொள்ளும்போது மகரகம நகர சபையின் தீர்மான உடன்படிக்கையில் அதிகாரம் குறித்தொதுக்கப்படாத போதிலும் 2013, யூலை 06 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மகரகம நகர சபைக்கான பௌத்த கொடியை கொள்வனவு செய்வதற்கு வத்தளை ஹேகித்த வெலிமுன வீதி, இலக்கம் 18 என்னும் முகவரியில் கிளிப்டெக் இன்ரஸ்டீஸ் (CLIFTEX INDUSTRIES (PRIVATE) LIMITED) நிறுவனத்திடம் விலைத் தொகையை பெறுவதற்கு செயல்பட்டமை மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச்சட்டத்தின் 2 (1) (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டபடி குற்றம் புரியதலாகும்.

(2) நீர் நகர சபையின் அங்கத்தவராக இருந்து கருமங்களை மேற்கொள்ளும்போது 2011, யூன் மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் மகரகம நகர சபைக்கான ரூபா ஒரு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து இருநூற்றி இருபத்தியெட்டு (ரூபா 144,228/- ) பெறுமதியின் கீழ் பௌத்த கொடிகளை கொள்வனவு செய்வதற்காக விலை மனு படிமுறைக்கு புறம்பாக பெறப்பட்ட விலைத் தொகையை சமர்ப்பித்து கொள்வனவு செய்வற்கு திட்டமிட்டமை மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டபடி குற்றம் புரிதலாகும்.

மேலும் மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விசாரணை ஆணைக்குழு சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளருக்குள்ள அதிகாரங்களை இவ் தனிநபர் ஆணைக்குழுவுக்கு உரித்தாவதுடன் மேலலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விசாரணை செய்யும்போது அதற்குரியதான இனங்காணப்பட்ட கடிதங்கள் மற்றும் வாய் மூலமான சாட்சிகள் என்பன கீழே உள்ள அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளது என்பதை மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண
நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு
மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சரும்.
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாணத்தின்முதலமைச்சு,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7.

**அட்டவணை**

வாய்மூல சாட்சி :

(i) திரு. யூ. பீ. எல். பெர்னாந்து, செயலாளர், மகரகம நகர சபை ;
(ii) திருமதி ஈ. எல். கே. எரபத்த, முன்னாளர் செயலாளர், மகரகம நகர சபை ;
(iii) கொள்வனவு செய்யும் விடயப் பொறுப்புக்கான முகாமைத்துவ உதவியாளர், மகரகம நகர சபை,
(iv) சபை விடயங்களுக்கு பொறுப்பான முகாமைத்துவ உதவியாளர், மகரகம நகர சபை.

எழுத்துமூல சாட்சி :

1. மகரகம நகர சபை.

(i) மகரகம நகர சபையின் இலக்கம் PO/ 1/ 2011 வெசாக் நிகழ்ச்சி கோவை;
(ii) 2011.05.05 ஆந் திகதியின் பொதுச் சபை அறிக்கை ;
(iii) 2011.08.08 ஆந் திகதியின் மகரகம நகர சபையின் நிதிக்குழுவின் அறிக்கை ;
(iv) 2011.08.25 ஆந் திகதியின் மகரகம நகர சபையின் சபை அறிக்கை ;
(v) மகரகம நகர சபையின் இலக்கம் 604154 ஐக் கொண்ட பொருட்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பான பத்திரம் ;
(vi) வத்தளை ஹேகித்த வெலிமுன வீதி, இலக்கம் 18 என்னும் முகவரியில் கிளிப்டெக் இன்ரஸ்டீஸ் (CLIFTEX INDUSTRIES (PRIVATE) LIMITED) நிறுவனத்தினால் 2011, யூன் மாதம் 6 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள விலைத் தொகைப் பத்திரம்.

06 - 39

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.